**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண்.231/2015**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் நாள் வெள்ளிக்கிழமை **பி.வா.சா.9**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவுக்கரசி | தொழில் | : | யூனியன் பேங்க ஆப் இந்தியா ஊழியர் |
| க/பெ | : | ராஜேஷ் | கிராமம் | : | பஜனைமடத்தெரு,தாராபுரம் டவுன் |
| வயது | : | 41 | தாலுகா | : | தாராபுரம் |
| | : | | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் வழக்கறிஞரிடம் சொல்லி தயார் செய்யப்பட்டது. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். 21.11.2013–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் என்னுடைய கணவர் பெயரில் மட்டும் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல என்னுடைய பெயரிலும் என்னுடைய கணவர் பெயரிலும் உள்ளது. மேற்படி கிரயத்தை சுப்புராயன் என்பவர் எனக்கு எழுதி கொடுத்தார். தாவா சொத்துக்கள் சுப்புராயன் என்பவருக்கு பூர்வீகமான சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட உயில்சாசனத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சடகோபால் நாயுடு என்பவருக்கு மேற்படி உயிலில் காணப்பட்ட சொத்துக்கள் பூர்வீகமான சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலை எழுதி வைக்க சடகோபால் நாயுடுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தை எழுதிக் கொடுத்த சுப்புராயன், சடகோபால் நாயுடுக்கு மகனாவர்.

2. மேற்படி சுப்புராயனுக்கும் எனக்கு மேற்படி சொத்தை கிரையம் செய்து கொடுக்க எந்த விதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அசல் உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அனைத்து நிலத்தையும் எனக்கு எழுதிக் கொடுத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல இன்னும் 28 சென்ட் நிலம் மீதம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகுதான் மேற்படி சொத்தில் நான் வீடு கட்டி அதற்கு வரி செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.37 ன்படி மேற்படி இடத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி கேட்டு 2016 ஆம் வருடம் தான் விண்ணப்பம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி அனுமதி கடிதத்தை இந்த வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வீடு கட்டுவதற்கான அனுமதி 06.04.2016 பிறகு தான் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3. என்னுடைய கணவர், 1,2 பிரதிவாதிகளின் தத்து பிள்ளை என்பதை காட்ட ஆவணங்கண் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.38 முதல் 40 வகையான ஆவணங்கள் இந்த வழக்கு நிலுவையில் இருக்கின்ற போது என்னால் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆதார் அடையாள அட்டையை வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் பி.வா.சா.ஆ.37 ல் உள்ள முகவரியில் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி சுப்புராயலு தொடர்ந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் 27.07.2020 தேதி இறந்தார். பி.வாசா.ஆ. 35-யை அவர் உடல்நிலை சரியில்லாத காலத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர் நல்ல நிலைமையில் இருந்த போது தான் எழுதிக் கொடுத்தார். உயிலை நாங்கள் தாக்கல் செய்யவில்லை 1-வது பிரதிவாதி தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயில் சுப்புராயன் இறந்த பிறகு நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4. பி.வா.சா.ஆ.42–ல் கண்டுள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் மேற்படி ஆவணத்தை எழுதிக் கொடுக்க 1–ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் அவருடன் பிறந்த சகோதரிகளை எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். வாதியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. (தற்போது வாதியின் உடன் பிறந்தவர்களை தனக்கு தெரியாது என்று சாட்சி சாட்சியமளிக்கிறார்) வாதியின் தாயார் சுசீலா 29/12/2007 ஆம் தேதி இறந்துவிட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அவரது கணவர் கஜபதியை எனக்கு தெரியாது. அவர் 29.03.2003 ஆம் தேதி இறந்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி வாதியின் தந்தை ரயில்வேயில் வேலை செய்து பல இடங்களுக்கு மாற்றம் பெற்று இறுதியில் பணி ஓய்வு பெற்றிருந்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் கிடையாது. 1–ம் பிரதிவாதியின் மனைவி தான் இரண்டாம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள், 17–ஆம் பிரதிவாதியை தத்தெடுத்தது தொடர்பாக அவர்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல நான் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. வாதியையும் அவரது உடன் பிறந்த சகோதரிகளையும் ஏமாற்றி கடந்த 21.11.2013 ஆம் தேதியில் பி.வா.சா.ஆ.35 பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர்வாதத்தில் தத்தெடுப்பது மூலமாகவும் கிரையபத்திரம் மூலமாகவும் எங்களுக்கு உரிமை உள்ளது என்று எந்தவிதமான எதிர் கோரிக்கையும் நான் எழுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல.அதற்கான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளேன். நான் அவ்வாறு எதிர் கோரிக்கை எதையும் கோரவில்லை என்றாலும் கோரியுள்ளதாக தவறாக

குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகன் ஜெய் ஆகாசுக்கு 21.10.2022 ஆம் வருடம் 10 வயது ஆகியிருந்தது. பெயர் மாற்றம் செய்து வரி செலுத்தியதாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஞானபிரகாஷ் என்பவர் 1–ம் பிரதிவாதியின் வீட்டில் குடியிருந்தவர் ஆவார். மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து உட்பட்ட பல சொத்துக்களை சட்டவிரோதமாக விற்பதற்கு என்னுடைய கணவர் துணை போயுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதியின் பங்கை ஏமாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**3–ம் பிரதிவாதி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையாக ஏற்றுக்கொள்கிறார்.**

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

6. மூன்றாம் பிரதிவாதி கலாவதி என்னுடைய மாமியார். மேற்படி கலாவதி உடைய சகோதரி சுசீலா என்பவரை எனக்கு தெரியும். மேற்படி காலாவதியும் சுசீலாவும் நல்ல உறவு முறையில் இருந்தார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. கலாவதி வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் 40 வருடத்திற்கு மேலாக குடியிருந்து வருகிறார். தாவா சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான் அது அவரது அனுபவத்தில் இருந்த சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதிக்கு அவரது தந்தை எழுதி வைத்த உயில் சாசனத்தை நான் பார்த்துள்ளேன். 1987 ஆம் வருடத்தில் இருந்து தாவா சொத்தை மனை பிரிவுகளாக பிரித்து 1–ம் பிரதிவாதி விற்று வருகிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மனை பிரிவுகளை கிரையம் பெற்றவர்கள் அப்போது இருந்து வீடு கட்டி அங்கு குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். நான் கிரயம் பெறும் போது முன் ஆவணங்களை பார்வையிட்டு தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

7. 1–ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை மனை பிரிவுகளாக பிரித்து கிரையம் கொடுத்தபோதும் அவர்கள் வீடு கட்டும்போதும் மூன்றாம் பிரதிவாதியோ அல்லது அவரது சகோதரி சுசீலாவோ அதை ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு குழந்தை இல்லாததால் அவர்களுக்கு இன்றைய தேதி வரையில் நான் பண உதவி செய்து வருகிறேன். 17–ம் பிரதிரவாதி, 1, 2 பிரதிவாதிகளின் பராமரிப்பில் தான் சிறுவயதில் இருந்து இருந்து வந்தார் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி என்னுடைய கணவருக்கு உயில் சாசனம் எழுதிக் கொடுத்தபோது அவர் நல்ல உடல்நலத்தில் இருந்தார். 1–ம் பிரதிவாதி இறந்தபோது அவரது ஈமச்சடங்குகளை அவரது வளர்ப்பு மகன் என்ற முறையில் என்னுடைய கணவர் தான் செய்தார். தாவா சொத்துக்களில் வாதிக்கும் மூன்றாம் பிரதிவாதிக்கோ வாதியின் சகோதரிகளுக்கு எந்த விதமான பாக உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரிதான்.

**6, 7, 9, 11, 12, 15, 16 பிரதிவாதிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்களுடையதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்**

8. 1–ம் பிரதிவாதியின் இறுதி சடங்குகள் மின்மயானத்தில் நடந்தது. மேற்படி இறுதிசடங்கு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இறந்போன 1–ம் பிரதிவாதியின் ஈமச்சடங்குகளை எனது கணவர் 17–ம் பிரதிவாதி செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.06 19:41:36 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.